

FREE EDITION

October - 2018

# ஜோதி

**Jothi**

**Spiritual Newsletter**

ஜோதி 12 : சுடர் 08 -140

## ஆன்மிகச் செய்திச்சுடர்

### மூல மந்திரம்

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!

*

**மேல்மருவத்தூர் சித்தர் பீடத்தில்**

## நவராத்திரி இலட்சார்ச்சனை

நமக்காக நாமே வேண்டிக்கொள்வதைவிட நமக்காகப் பிறர் வேண்டுவதும், பிரார்த்தனை செய்வதும். அர்ச்சனை செய்வதும் மிகுந்த பயன் தரும். அத்தகைய பிரார்த்தனைக்குச் சக்தி அதிகம். இந்த வாய்ப்பு இலட்சார்ச்சனை மூலமாக நமக்குக் கிடைக்கின்றது.

நவராத்திரி விழாவின்போது ஆயிரக்கணக்கான மகளிர் சக்திகள் புற்று மண்டபத்திலும் கருவறை மண்டபத்திலும் அமர்ந்து, நமது பெயரைச் சொல்லி, நமது நட்சத்திரம் சொல்லி, “இன்னார் குடும்பம் நலம் பெற, வளம்பெற ஓம் சக்தியே!” என்று சங்கல்ப்பத்துடன் சித்தர் பீடத்தில் இலட்சார்ச்சனை நடைபெறுகின்றது.

(தொடர்ச்சி...6ஆம் பக்கம்)

## உயிர் காத்த கலச தீர்த்தம்

உடுமலைப்பேட்டைக்கு அருகில் உள்ள தேவனூர் புதூர் கிராமத்திலுள்ள ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றச் செயலாளர் திரு.இராமசாமி ஆசிரியப் பணிக்குரிய நேரம் தவிர எஞ்சிய நேரங்களில் ஆன்மிகத் தொண்டுகள் செய்து வருவார். அவர் தம்பி திரு.பஞ்சலிங்கம் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிந்து வருபவர்.

அண்ணன் இராமசாமிக்கு அன்னை ஆதிபராசக்தியிடம் ஈடுபாடு ஆன்மிகத்தில் ஈடுபாடு. தம்பி பஞ்சலிங்கத்திற்கோ இவற்றில் நம்பிக்கை இல்லை. பஞ்சலிங்கத்தின் மனைவிக்குத் தெய்வ நம்பிக்கை. தெய்வ பக்தி உண்டு. “தாயே! என் கணவர் கொஞ்சமும் தெய்வ நம்பிக்கை இல்லாதவராக இருக்கிறார். அவர் மனத்தை எப்படியாவது மாற்று!” என்று வேண்டிக்கொள்வார்.

**இசைமணி செல்வராஜ் - உடுமலை**

1993ஆம் ஆண்டு, மே மாதம் மேல்மருவத்தூர் ஆலயத்தில் சித்திரா பௌர்ணமியை ஒட்டி மாபெரும் கலச விளக்கு வேள்விப் பூசை நடைபெற்றது. சக்தி இராமசாமி ஒரு வாரம் மருவத்தூர் சென்று தொண்டு செய்துவிட்டு, வேள்விப்பூசையில் வைக்கப்பட்ட கலசம் ஒன்றை வாங்கிக்கொண்டு ஊர் திரும்பினார்.

அவர் ஊர் வந்து சேர்ந்த நான்காம் நாள் 11.5.1993 அன்று அவர் தம்பி பஞ்சலிங்கம் உடல் நலம் கெட்டு இரத்த வாந்தி எடுத்தார். வீட்டிலுள்ளோர் அனைவரும் பயந்துபோய் அலறியடித்துக்கொண்டு அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். அன்றே அவரை மருத்துவமனையில் சேர்த்துக்கொண்டு தீவர சிகிச்சை அளித்தனர். இரத்தவாந்தி மட்டும் நிற்கவில்லை.

“இனி இந்த நோயாளியைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை. உச்சக்கட்ட அபாயத்துக்கு நெருங்கிவிட்டார். இனிக் கடவுள்தான் இவரைக் காப்பாற்ற முடியும். வீட்டிற்கு எடுத்துக்கொண்டு செல்லுங்கள்” என டாக்டர்கள் கூறிவிட்டனர்.

தம்பியின் நிலைமையக் கண்டு அண்ணன் இராமசாமி துடித்தார்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

**“தங்கள் தாய் தந்தை இறந்த பிறகு அவர்கள் புகழைப் பாடுவதை விட, அவர்கள் உயிரோடு இருக்கும்போதே அவர்களைப் பேணிக் காக்க வேண்டும்.”**

## "ஜோதி"

**- ஆன்மிக செய்திச்சுடர்**

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான 'சக்தி ஒளி' மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக "ஜோதி" ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: "Jothi Sudar"**

## செய்திச்சுடரில்...

**உயிர் காத்த கலசத் தீர்த்தம்**
Page: 1 – 2

**ஏழைக்கிழவியாய் வந்தாள்**
Page: 11 - 12

UPCOMING EVENTS

Melbourne: 4, 10
Sydney: 3, 8
Brisbane: 13

**திருமதி அம்மா பதில்கள்**
பக்கம்: 5

**செய்வினை அழித்த குடும்பநல வேள்வி**
பக்கம்: 9, 10

**Divine Miracles**
Page:7

**சித்தர்பீட விழாக்கள்**
பக்கம்: 8

**ஆன்மிக நாட்குறிப்பு**
பக்கம்: 14

# உயிர் காத்த கலச தீர்த்தம்; . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

"இவன் போய்விட்டால் இவனுடைய மனைவியும் மூன்று பெண் குழந்தைகளும் அனாதையாகி விடுவார்களே! நமக்குத் தாயுமில்லை! தந்தையும் இல்லையே!" என்று புலம்பினார். பின் அன்னையிடம் வேண்டினார்.

"தாயே! நீதான் என் தம்பியின் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். அவனுக்கு உயிர்பிச்சை கொடு!" என்று கதறியழுதார்.

சட்டென்று அவருக்கு மின்னல் போல ஒரு யோசனை பளிச்சென்று தோன்றியது.

'சித்திரா பௌர்ணமியன்று வேள்விப்பூசையில் வாங்கி வந்த கலசத் தீர்த்தத்தை ஊட்டினால் என்ன..?'

வீட்டுக்குள் ஓடினார். பூஜையறையில் இருந்து கலசத் தீர்த்தத்தையும், குங்குமப் பிரசாதத்தையும் எடுத்துக் கொண்டு, அன்னையிடம் வேண்டிக்கொண்டு மருத்துவமனைக்கு ஓடி வந்தார்.

பஞ்சலிங்கத்திற்குக் கலசதீர்த்தம் ஊட்டப்பட்டது. ஓரளவிற்கு நம்பிக்கை ஏற்பட்டது. உடனே கோவை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டார். புதுப்புது சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. டாக்டர்கள் கொடுத்த மருந்துக்குப் பலன் எதுவும் கிட்டவில்லை. அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சம் கலச தீர்த்தம் ஊட்டினார்கள் உறவினர்கள்.

15.5.1993 அன்று அறுவை சிகிச்சை செய்ய டாக்டர்கள் முடிவு செய்தனர். அவருக்கு இரண்டு பாட்டில் இரத்தம் செலுத்தப்பட்டது. அவருடைய மூத்த மகள் சக்தி ராதா அவர் அருகில் அமர்ந்து கொண்டு "அப்பாவைக் காப்பாற்று" என்று அன்னையை வேண்டிக்கொண்டு மந்திர நூலில் உள்ள மந்திரங்களைப் படித்து வந்தாள். 15.5.1993 அன்றே பெரிய அறுவை சிகிச்சை நடத்தப்பட்டது.

எந்த உணவையும் ஏற்றுக் கொள்ளாத இயலாத நிலையில் இருந்த அவருக்குக் கலச தீர்த்தம் மட்டும் தான் சிறிது ஊட்டப்பட்டது. 15 நாட்களுக்குப் பிறகு அவருக்கு அன்னையின் அருளால் சுயநினைவு திரும்பியது.

உயிர் பிழைத்த பஞ்சலிங்கம் சொன்னார். "நான் படுக்கையில் மயக்கமாக இருந்தபோதும், மருத்துவர்கள் சிகிச்சை அளித்தபோதும் அன்னை ஆதிபராசக்திதான் சிகிச்சை அளித்து வருகிறாள் என்பதை உணர்ந்தேன். நான் இளம் வயதிலேயே தாய் தந்தையரை இழந்தவன். அதனால் பொறுப்பில்லாமல் வளர்ந்துவிட்டேன். ஆணவத்தோடு நடந்துகொண்டேன். அதுதான் இத்தனை சிரமங்களுக்கும் காரணம்.

என் அண்ணன் பிரார்த்தனை, என் மகள் பிரார்த்தனைகளை ஏற்று அந்தத்தாய் ஆதிபராசக்தி கலச தீர்த்தத்தின் மூலம் எனக்கு உயிர்ப்பிச்சை அளித்துவிட்டாள்" என்றார் திரு.பஞ்சலிங்கம்.

ஓம்சக்தி!

# Sydney - Mandrams - Upcoming Events – October 2018



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**

Contact: 02-96420519, 0439686452

**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School

Moree Street – Westmead



| | | | |
|---|---|---|---|
| 05.10.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 12.10.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 19.10.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 24.10.2018 | WEDNESDAY– புதன் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>பௌர்ணமி விளக்குப் பூஜை |
| 26.10.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**புரட்டாசி – அமாவாசை–பௌர்ணமி :**

பசுக்கள் விருத்தி உண்டாகும்.
கால்நடைச் செல்வம் பெருகி நிறைந்த பால் வளப்பெருக்கம் உண்டாகும்.

**ஐப்பசி – அமாவாசை–பௌர்ணமி :**

பசிப்பிணி நீங்கும்.
பசிப்பிணி அகலுகின்ற விதத்தில் நிறைந்த வளம் உண்டாகும்.

## தருமபுரியில் ஒரு வீட்டில்…

1983ஆம் ஆண்டு நடைபெற்றது இது…

தருமபுரியில் ஒரு வீட்டில் படாத துன்பம் அனுபவித்து வந்தனர். சோற்றை எடுத்தால் நரகலாக மாறிவிடும். வீட்டிலிருந்த குழந்தை திடீரென குப்பைத் தொட்டியில் விழுந்துகிடக்கும். அடுப்பில் வைக்கப்பட்ட பால் பானை யாரும் இல்லாமலே கீழே நழுவிவிடும்.

அந்த வீட்டுத் தலைவர் செவ்வாடைத் தொண்டர்களிடம் வந்து முறையிட்டார். அழுதார். "எந்தப் பாவியோ செய்வினை வைத்துவிட்டான். இதிலிருந்து மீள்வதற்கு ஏதாவது வழியுண்டா?" என்று கேட்டார். "அன்னை அருளிய முறைப்படி அந்த வீட்டில் வேள்விக் குழுத் தொண்டர்கள் சென்று குடும்பநல வேள்வி செய்தனர். அன்னதானம் செய்ய வைத்தனர்.

வேள்வி முடிந்த மூன்றாம் நாள் அந்த வீட்டில் எங்கிருந்தோ ஒரு ஓட்டுத்துண்டு விழுந்தது. அதை நெருப்பில் போட்டு எரித்தபோது மூன்று தினம் தொடர்ந்து எரிந்தது.

அந்தக் குடும்பத் தலைவர் அன்னையிடம் வந்தார். அருள்வாக்கு கேட்டார். "என் பெயரில் ஒரு வார வழிபாட்டு மன்றம் அமைத்து உன் பகுதியில் ஆன்மிகப் பணி செய்து கொண்டே வா! எதிரில் உள்ள அதர்வண பத்ரகாளி சன்னதிக்குச் சென்று இன்னின்ன முறையில் வழிபட்டுவிட்டுப் போ!" என்றாள் அன்னை.

அவ்வாறு செய்த பிறகே செய்வினைத் துன்பங்களிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

ஓம் சக்தி

# Melbourne - Mandrams – Upcoming Events – October 2018



## Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



**Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.**

**Vermont South Community House**,
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 05.10.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

### நவராத்திரி அகண்ட தீபம் ஏற்றலும் தரிசனமும்

**Glen Weverley Scout Hall**,
Whites Lane – Glen Waverley 3150 – (Mel.Ref.: 71 D 7)

நவராத்திரி 11 நாட்களும் சிறப்பு அலங்காரங்களுடன் குங்கும இலட்சார்ச்சனை, நவராத்திரி சிறப்பு நிகழ்ச்சிகளுடன் வழிபாடுகளும் இடம்பெறும்.

| | | | |
|---|---|---|---|
| 09.10.2018 | செவ்வாய் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 1ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 10.10.2018 | புதன் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 2ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 11.10.2018 | வியாழன் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 3ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 12.10.2018 | வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | "அகண்டம் தீபம் ஏற்றல்" நவராத்திரி 4ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 13.10.2018 | சனி | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 5ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 14.10.2018 | ஞாயிறு | 7.30p.m. – 9.30p.m. | "அகண்டம் தீபம் குளிர்வித்தல்" நவராத்திரி 6ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 15.10.2018 | திங்கள் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 7ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 16.10.2018 | செவ்வாய் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 8ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 17.10.2018 | புதன் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 9ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 18.10.2018 | வியாழன் | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 10ஆம் நாள் கூட்டு வழிபாடு |
| 19.10.2018 | வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | நவராத்திரி 11ஆம் நாள் கூட்டு வழிபாடு |

| | | | |
|---|---|---|---|
| 24.10.2018 | WEDNESDAY – புதன் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja பௌர்ணமி விளக்குப் பூஜை |
| 26.10.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

Lalor

**Join Prayers: Once a month - Sunday 4.00p.m. – 6.00p.m.**

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)




## இலட்சார்ச்சனையின்போது…

"இலட்சார்ச்சனை நடைபெறுகிறபோது பயபக்தியுடன் மந்திரம் படிக்க வேண்டும். சங்கல்ப்பம் என்பது ஏதோ ஒரு சந்தர்ப்பத்திற்காகச் செய்யப்படுகிறது என்று அமையாமல் மற்றவர்கள் சங்கடத்தைத் தீர்ப்பதற்காகச் செய்யப்படுவது என்று கருத வேண்டும்."

- அன்னையின் அருள்வாக்கு



# திருமதி அம்மா பதில்கள்

- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

கன்றுக்குட்டிக்காகச் சுரக்கின்ற பாலைக் கறந்து, மனித உடம்பு வளர்வதற்காக அதைப்பயன்படுத்துவது சரியா அம்மா..? அது கன்றுக்குட்டிக்கு நாம் செய்யும் துரோகம் அன்றோ! இது ஒரு பாவச் செயல் அன்றோ! இது தாய்ப்பாலைக் குழந்தைக்குக் கொடுக்காமல் ஏமாற்றுவது போலாகாதா அம்மா..?

நீங்கள் பசு வதை தடைச் சங்கத்தின் உறுப்பினராக இருக்கிறீர்களா? ஒரு உயிர் மற்றொரு உயிரைச் சார்ந்து வாழ்வது தானே இயற்கையின் நியதி? அதைத்தானே உணவு சுழற்சி முறை என்கிறார்கள். பசுவைப் பாதுகாப்பவன் அதனால் வருமானம் வராவிட்டால் அதை எப்படிப் பாதுகாப்பான்? மேலும் ஒரு பசு சுரக்கின்ற பால் முழுவதையும் சிறிய கன்றுக்குட்டி குடித்தால் அதற்கு அதிகமான பாலால் அஜீரணம் ஏற்பட்டு வயிற்றுப்போக்கு ஏற்படும். பசுவிடமிருந்து பாலைக் கறப்பது துரோகம் ஆகாது. எளியவர்களை ஏமாற்றிப் பணம் கறப்பதுதான் துரோகம்.

பாலைக் கறப்பதே துரோகம் என்றால், லாரி லாரியாக மாடுகளை ஏற்றி, மணிக்கணக்கில் நிற்க வைத்து உராய்வு ஏற்பட்டு, இரத்தம் சொட்டச் சொட்ட அழைத்துச் சென்று வெட்டிக் கறியாக விற்கிறார்களே அதற்குப் பெயர் என்ன? இந்தக் காலத்தில் மாடுகளை வெட்டாமல் இருந்தாலே பெரிய விஷயம். தாய்ப்பாலே கொடுக்காத தாய்மார்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். பால் முக்கிய உணவுப்பொருளாகப் பயன்படுகிறது. பால் உற்பத்தியால் பொருளாதாரமும் கிடைக்கிறது. அதனால் ஊக்க மருந்து கொடுத்து அதிகப்பால் கறப்பதுதான் பாவம். கன்றின் தேவைக்குப்போக மீதிப்பாலை மனிதன் சாப்பிடுவது பாவமில்லை. நீங்கள் பால் சம்பந்தப்பட்ட எந்த உணவையும் எடுத்துக்கொள்ள மாட்டீர்களா? இந்தக்காலத்தில், இந்த அளவுக்கு வெகுளித்தனமாக இருந்தால் எப்படிம்மா?

## சுத்தமான ஆத்மா

“ஆன்மாவைச் சுத்தமாக வைத்துக்கொள்! தொண்டு அதிகம் செய்துஆன்மாவைச் சுத்தப்படுத்திக்கொள். உன் ஆன்மாதான் திறவு கோல். உன் ஆன்மாதான் செங்கோல்.”

## ஆன்மாவே பதில் சொல்லும்

“உன்னுடைய ஆன்மாவைத் தட்டி எழுப்பி, நீ எங்கிருந்து வந்தாய்? என்ன செய்யப் போகிறாய்? என்று அடிக்கடி கேட்டுக்கொண்டிருந்தால், அதற்கான பதில் கிடைக்கும்.”

## அந்தப்பொருள்தான் ஆன்மா

“வாழ்ந்தது போதும் என்னை அழைத்துக்கொள் என்று கூறுகிறீர்களே.. அழைத்துக் கொள்ள ஒரு பொருள் இருப்பதாக எண்ணுகிறீர்களே.. அந்தப் பொருள்தான் ஆன்மா!

ஆணவத்தைச் சீக்கிரம் அழைத்துக் கொள்ளலாம்.
நல்ல ஆன்மாவைச் சீக்கிரம் அழைத்துக்கொள்ள முடியாது.”

அன்னையின் அருள்வாக்கு

# நவராத்திரி இலட்சார்ச்சனை....

(1ஆம் பக்க தொடர்ச்சி)

**இலட்சார்ச்சனை சங்கல்ப்ப குங்கும அர்ச்சனையின் பலன்கள்:**

- குடும்ப வளம், தொழில் வளம் கிடைக்கும், மன நலம் கிடைக்கும்.
- ஏவல், பில்லி, சூனிய, தீய சக்திகளிடமிருந்து பாதுகாப்பு.
- திருமணத்தடை நீங்கும், குழந்தைப்பேறு கிட்டும்.
- கடன் தொல்லை, கிரக தோசத்தில் இருந்து விடுபடுதல்.
- அனைத்து துன்பங்களிலிருந்தும் விடுதலை கிட்டும்.

நவராத்திரி ஒன்பது நாளும் இப்படி மற்றவர்களின் நன்மைக்காக இந்த இலட்சார்ச்சனை நடைபெறுகிறது. நமது இலட்சியம் நிறைவேற இந்த இலட்சார்ச்சனை துணைபுரிகின்றது.
பக்தர்கள், தங்கள் அருகாமையிலிருக்கும் மன்றங்களையோ அல்லது மன்ற சக்திகளையோ தொடர்புகொண்டு தங்கள் பெயர்களையும், நட்சத்திரங்களையும் பதிவு செய்து மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆலயத்தில் நடைபெறும் இலட்சார்ச்சனையில் பங்குகொள்ளுங்கள்.

**இலட்சியங்களை அடைய இலட்சார்ச்சனை செய்வோம்!**

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் நவராத்திரி நாளில் அன்னையால் ஏற்றப்படும் அகண்ட தீபத்தில் முக்கூட்டு எண்ணெய் ஊற்றி அந்த தீப தரிசனத்தைப் பெற்றுச் செல்லுங்கள். அங்கு சென்று தரிசனம் பெற வாய்ப்பு கிடைக்காதவர்கள் அருகிலுள்ள அன்னையின் துணை ஆலயங்களான மன்றங்களில் ஏற்றப்படும் அகண்ட தீபத்திற்கு முக்கூட்டு எண்ணெய் ஊற்றி தரிசனம் பெறுங்கள்.
இவற்றால் உங்கள் ஊழ்வினைக் கொடுமைகள் தணியும்.

---

## நவராத்திரி

“நவராத்திரி விழா நாட்களில் இரண்டு வேளை மட்டுமே உணவு உண்டு. அகண்ட ஜோதி தரிசனம் செய்ய வேண்டும்.”
“நவராத்திரி விழா என்பதும் ஜோதி தரிசனம் என்ற தத்துவம் கொண்டது தான்.
நான்கு பேர் சேர்ந்து செய்யும் தொண்டு, நான்கு பேர் சேர்ந்து செய்யும் அர்ச்சனை என்ற கூட்டு முயற்சி கொண்டதுதான்.”

**அன்னையின் அருள்வாக்கு**

---


**புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்**



ஆன்மிக விடைதேடும்
அதிக பக்தர்களின்
மனதைக்கவர்ந்த
**ஆதிபராசக்தி இணையத்தளம்**
**www.adhiparasakthi.co.uk**

**“ஜோதி” ஆன்மிகச் செய்திச் சுடரை**
**www.adhiparasakthi.co.uk** என்ற
**இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.**

ஜோதி ஆன்மிகச் செய்திச்சுடர்

# Divine Miracles at Melmaruvathur

## Your husband is like a broken mud pot:

Thirumalai Nayaka Gounder belonged to Vettaikaaran Puthur near Pollachi. He was suffering from a lot of ailments like diabetes, heart problems, arthritis etc. So he came to Maruvathur and was waiting for revelation. His wife had also come with him. As usual Adigalar came from his place, went around the temple and before going to revelation peetam, he came near Thirumalai Nayakar's wife, threw some small packets on her lap. Everyone asked what it was. There were 3 pakets, one was kumkum, the other was viboothi and the third one was a flower. She was obviously very much pleased. Then after some months she came for revelation. Mother said, "My dear daughter. Your husband's body is like a broken mud pot. Somehow I have put all the pieces together. From now on he will be alright".

The lady's happiness and tears knew no bounds. She ran to join her husband who was at that time admitted in a hospital at Coimbatore. When she entered the room, she saw a nurse,but unusually clad in a red saree. The nurse came inside the room, dressed up his wound in the leg. Thirumalai Nayakar's wife was watching this. She was wondering why none of the doctors did that. The nurse removed small copper plates from his legs. The next minute the nurse was missing. She vanished into the thin air. His miraculous recovery became the talk of the hospital. Who else but Melmaruvathur Mother, could have come there clad in a red saree. There are no words to explain her kindness and care.

***


## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

சக்தி ஒளி

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

| தனி இதழ் | ஆண்டுச்சந்தா | ஆயள் சந்தா | வெளிநாட்டுச் சந்தா |
|---|---|---|---|
| ரூபா ₹ 15.00 | ரூபா ₹ 180.00 (இந்தியா) | ரூபா ₹ 2600.00 (இந்தியா) | இந்திய ரூபா ₹ 3500.00 (இரண்டு ஆண்டுகள்) |

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **"ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை"** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.


Address: Editor,'Sakthi Oli' Office, Adhiparasakthi Sithar Peetam, Melmaruvathur 603319, Tamil Nadu, South India.

# Sydney - Mandrams - Upcoming Events – October 2018



## மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்
**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**

Contact: 02-97643872, 0416217317



**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**

Homebush High School (Gymnastic Hall)

Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 05.10.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 12.10.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 19.10.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 26.10.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>பௌர்ணமி விளக்குப் பூஜை |

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!



## ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

### ஆலய சிறப்பு விழாக்கள்

### 2018 - ஸ்ரீ விளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| புரட்டாசி | 22 | 08.10.2018 | திங்கள் | **அமாவாசை - வேள்வி** |
| புரட்டாசி | 23 | 09.10.2018 | செவ்வாய் | **சித்தர் பீடத்தில் நவராத்திரி பெருவிழா ஆரம்பம்** |
| ஐப்பசி | 07 | 24.10.2018 | புதன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஐப்பசி | 21 | 07.11.2018 | புதன் | **அமாவாசை - வேள்வி** |
| கார்த்திகை | 7 | 23.11.2018 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| கார்த்திகை | 20 | 06.12.2018 | வியாழன் | **அமாவாசை - வேள்வி** |
| மார்கழி | 7 | 22.12.2018 | சனி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மார்கழி | 10 | 25.12.2018 | செவ்வாய் | **கிறிஸ்மஸ்** |

## மனத்தில் அழுக்கை வைத்துக்கொண்டு….

"மனத்தில் அழுக்கை வைத்துக்கொண்டு நீ புதுப்புது இயக்கங்களுக்குப் போனாலும், புதுப்புது சாமியார்களிடம் போனாலும் உன் மன அழுக்கு நீங்கி விடாது.

பழுதடைந்த பழைய கடிகாரத்தில் புதிய மின்கலம் (செல் - Cell) போட்டாலும் ஓடாது. அதுபோல உன் மனத்தில் அழுக்கை வைத்துக்கொண்டு எங்கே அலைந்தாலும் ஆன்ம வளர்ச்சி கிடைத்து விடாது.

உன் மனம் ஆன்மிக உணர்வுடன் செயல்பட வேண்டும். ஆன்மிக உணர்வுடன் தெய்வத்தை வழிபட வேண்டும். அப்போதுதான் பயன் கிடைக்கும். ஆன்ம வளர்ச்சியும் ஏற்படும்.

சிறிய பாம்பு! பெரிய பாம்பு! இரண்டிற்கும் விஷம் ஒன்றுதான்."

**அன்னையின் அருள்வாக்கு**

Guruvadi Saranam



Thiruvadi Saranam

# OM SAKTHI

Ore Thai



Ore Kulam

## MELMARUVATHUR ADHIPARASAKTHI SPIRITUAL MOVEMENT
## MELMARUVATHUR, TAMILNADU STATE.

### NAVARATHRI KAAPPU / ALANGARAM / STATE (DISTRICT LIST) 2018

| SR. NO. | DATE | DAY | ALANGARAM | KAAPPU | STATE / DISTRICT / COUNTRY |
|---|---|---|---|---|---|
| 1 | 08-Oct-18 | MONDAY | THANGA KAVASAM | THANGA KAVASAM | CHENNAI (WEST , CENTRAL , SOUTH) |
| 2 | 09-Oct-18 | TUESDAY | SARVAMANGALADEVI | KUNGUMAM | THANJAVUR, MUMBAI, SRILANKA |
| 3 | 10-Oct-18 | WEDNESDAY | INDIRANI | MANJAL | CUDDALORE, KARNATAKA, MALAYSIA |
| 4 | 11-Oct-18 | THURSDAY | DRAUPADI AMMAN | SIRUTHANIA | VILLUPURAM, SALEM, RAMANATHAPURAM, DUBAI |
| 5 | 12-Oct-18 | FRIDAY | ADHIPARASAKTHI | VEPPILLAI | DHARMAPURI, NAMAKKAL, NILAGIRI, LONDON |
| 6 | 13-Oct-18 | SATURDAY | VAISHNAVI | THULASI | COIMBATORE, VIRUDHUNAGAR, THOOTHUKUDI, KERALA, AUSTRALIA |
| 7 | 14-Oct-18 | SUNDAY | THIRIPURASUNDARI (SIRKALI) | VIBHUTI | MADURAI, PUDUKOTTAI, PUDUCHERRY, SIVAGANGAI, CANADA |
| 8 | 15-Oct-18 | MONDAY | PRANASAKTHIDEVI | SANTHANA | ERODE, DINDUGAL, THIRUVALLUR, ANDAMAN, SWISS |
| 9 | 16-Oct-18 | TUESDAY | SURIYAKALADEVI | NAVATHANIYA | VELLORE, TIRUPUR, THIRUVANAMALAI, FRANCE |
| 10 | 17-Oct-18 | WEDNESDAY | ULAGAMAI (TENKASI) | MITTAI (CHOCOLATE) | TIRUNELVELI, KRISHNAGIRI (WEST & SOUTH), ARIYALUR, KANIYAKUMARI, SINGAPORE |
| 11 | 18-Oct-18 | THURSDAY | SARASWATHI – SRIVIDYA | KARKANDU | TRICHY, ANDHRA, KARUR, AMERICA |
| 12 | 19-Oct-18 | FRIDAY | MAGIDASURAMARDHINI (DURGADEVI) | ULAR PAZHANGAL | KANCHIPURAM, THENI, PERAMBALOOR, BHOPAL |

### மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அன்னைக்கு

## நவராத்திரி கால அபிடேக, சிறப்பு அலங்காரங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 08.10.2018 | திங்கள் | அபிடேகம் | தங்கக் கவசம் | தங்க கவசம் |
| 09.10.2018 | செவ்வாய் | அபிடேகம் | சர்வமங்களாதேவி | குங்குமக்காப்பு |
| 10.10.2018 | புதன் | அபிடேகம் | இந்திராணி | மஞ்சள் காப்பு |
| 11.10.2018 | வியாழன் | அபிடேகம் | திரௌபதி அம்மன் | சிறுதானிய காப்பு |
| 12.10.2018 | வெள்ளி | அபிடேகம் | ஆதிபராசக்தி | வேப்பிலைக்காப்பு |
| 13.10.2018 | சனி | அபிடேகம் | வைஷ்ணவி | துளசிக்காப்பு |
| 14.10.2018 | ஞாயிறு | அபிடேகம் | திரிபுரசுந்தரி(சீர்காழி) | விபூதிக்காப்பு |
| 15.10.2018 | திங்கள் | அபிடேகம் | பிராணசக்திதேவி | சந்தனக்காப்பு |
| 16.10.2018 | செவ்வாய் | அபிடேகம் | சூரியகலாதேவி | நவதானியக்காப்பு |
| 17.10.2018 | புதன் | அபிடேகம் | உலகம்மை(தென்காசி) | மிட்டாய்-சாக்லட் |
| 18.10.2018 | வியாழன் | அபிடேகம் | சரஸ்வதி (ஸ்ரீவித்யா) | கற்கண்டு |
| 19.10.2018 | வெள்ளி | அபிடேகம் | மகிசாசுரமர்த்தினி (துர்க்காதேவி) | உலர் பழங்கள் |

# Melbourne - Mandrams – Upcoming Events – October 2018

**Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram**

**மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்**

(Reg. No. 2193)

**விக்டோரியா – அவுஸ்திரேலியா**

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com
Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

**கூட்டு வழிபாடுகள்:**

**Clarinda – வெள்ளி - Friday:**

**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**

**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Clarinda - 05.10.2018 | Friday | புரட்டாசி | 19 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 07.10.2018 | Sunday | புரட்டாசி | 21 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 12.10.2018 | Friday | புரட்டாசி | 26 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 14.10.2018 | Sunday | புரட்டாசி | 28 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 19.10.2018 | Friday | ஐப்பசி | 02 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 21.10.2018 | Sunday | ஐப்பசி | 04 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |
| Clarinda - 26.10.2018 | Friday | ஐப்பசி | 09 | **Joint Prayer – கூட்டு வழிபாடு** – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 28.10.2018 | Sunday | ஐப்பசி | 11 | **Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm** |

**08.10.2018 – திங்கள் - அமாவாசை, 24.10.2018 – புதன் - பௌர்ணமி**

## மூன்று வினைகளைத் தீர்க்கும் முக்கூட்டு எண்ணெய்

**அ**கண்டத்திலிருந்து பெறப்படும் முக்கூட்டு எண்ணெய் மூன்று வினைகளை நீக்கும். அகண்டத்திலுள்ள அந்த சுடர் ஒளியானது திரி வழியாக அகண்டத்திலுள்ள எண்ணெய்க்குச் செல்வதால் அந்த முக்கூட்டு எண்ணெய்க்கு உடல் நோய்களையும், உள்ளத்து நோய்களையும், முற்பிறவி வினைகளையும் நீக்கும் ஆற்றல் உண்டு. இந்த முக்கூட்டு எண்ணெயை பெற்றுச்சென்று பயன்பெற்றவர்கள் பல்லாயிரக்கணக்கானோர்.

ஒன்பது வாசல் கொண்ட நமது உடம்பு. அண்டத்திலுள்ளது பிண்டத்தில் உள்ளது. என்பார்கள்.
ஒன்பதின் சிறப்பு : நவமணிகள் - நவகோள்கள் - நவராத்திரி – நவதானியங்கள்….

முக்கூட்டு எண்ணெயை பெற்றுச்சென்று இல்லங்களில் ஒன்பது இடங்களில் முக்கூட்டு எண்ணெய் சேர்த்து தீபமேற்றி வழிபடுங்கள் என்று அம்மா அருள்வாக்கில் பல வருடங்களுக்கு முன்னர் அருளியுள்ளார்கள்.

நவராத்திரி அகண்ட விளக்கு எண்ணெயை எடுத்துச் சென்று அதில் முக்கூட்டு எண்ணெய் சேர்த்து உங்கள் வீட்டில் **ஒன்பது இடங்களில்** விளக்கேற்றி வைக்க வேண்டும்.

முன்வாசல், பின்வாசல், பூசையறை, சமையலறை, பணம் வைக்கும் இடம், முதலிய முக்கியமான **ஒன்பது இடங்களில்** விளக்கேற்றி வைக்க வேண்டும்.



# ஏழைக் கிழவியாய் வந்தாள்!

“தஞ்சை மாவட்டம் எங்கும் என் மன்றங்களைத் தொடங்கு! பட்டித்தொட்டி எங்கும் ஆன்மிகம் பரப்பு! நான் தஞ்சை மண்ணில் வந்து விளையாடப் போகிறேன்!” – அன்னை அருள்வாக்கில் சில ஆண்டுகளுக்கு முன்பாக அருளிய வார்த்தைகள் இவை.

தஞ்சை மாவட்டத்தில் எத்தனையோ பக்தர்கள் வாழ்விலும், ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றங்களிலும் அருள் விளையாட்டு ஆங்காங்கு நடைபெற்ற வண்ணம்தான் இருக்கிறது. உலகத்துக்கு அவை வெளிப்படவில்லை.

மன்னார்குடியில் 4.1.1995அன்று பக்தர்கட்கு இருமுடி ஏந்தும் நிகழ்ச்சி. அதனை விழா போலவே கொண்டாடினர் மன்றத்தார்.

**சக்தி அமரானந்தம்**
தஞ்சாவூர்

ஆடைதானம் நடைபெற்றுக்கொண்டிருந்த நேரம் அது!

ஆடைதானம் முடிகிற வேளையில் எங்கிருந்தோ ஒரு கிழவி – ஏழைக்கிழவி “எனக்கும் ஒரு புடவை கொடுங்கோ.. நான் மருவத்தூரிலிருந்துதான் வருகிறேன்” என்றாள்.

பாவம்! யாரோ ஒரு பிச்சைக்காரி. மிச்சம் மீதி ஏதாவது புடவை இருந்தால் பார்ப்போம் என்று ஒரு தொண்டர் மேடையில் அவசர அவசரமாக வந்து தேடினார். நல்லவேளை ஒரு புடவை மீதம் இருந்தது. அந்த ஏழைக் கிழவிக்கு வழங்கினார்கள்.

அதே கிழவி ஆன்மிக ஊர்வலத்திலும் கலந்துகொண்டாள்.

அன்னதானம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. வரிசையில் வந்த அந்தக் கிழவிக்கும் ஒரு பொட்டலம் வழங்கப்பட்டது.

“இன்னொரு பொட்டலம் போடு!” என்று சற்று அதிகார தோரணையோடு கேட்கிறாள் கிழவி.

“ஒருத்தருக்கு ஒரு பொட்டலம்தான்..” என்கிறார் சிடுசிடுத்த முகத்தோடு ஒரு தொண்டர்.

கிழவியோ சிரிக்கிறாள். அந்தச் சிரிப்புக்கு அப்படி என்ன சக்தியோ..!

இந்தக்கிழவி வம்புக்கார கிழவியாய் இருக்கும் போலிருக்கிறதே என்றெண்ணிய சக்தி ராமமூர்த்தி அங்கிருந்த சாதத்தை அப்படியே அதிகமாக அள்ளி ஒரு வாழையில் வைத்துக் கொடுக்கிறார்.

அந்தக்கிழவி எடுத்து உண்கிறாள். இதழின் ஓரத்தில் புன்னகை.

உருவோடு வந்ததுபோல் போக்குக் காட்டிவிட்டு அடுத்தகனம் அவள் அருவமாய் மறைந்தாள்.

அந்த அதிகார தோரணையும், இதழோரப் புன்னகையும் அவளைச் சாதாரண ஏழைக் கிழவியாக நினைத்துப் பார்க்க முடியாத ஒரு தொண்டர் அவள் மாயமாய் மறைந்த பிறகுதான் வந்தவள் யார் என்று உறுதிப்படுத்திக் கொண்டார்.

அன்றைக்கு மன்னார்குடி மன்றத்தில் இருமுடி ஏந்திய 170 பேர்க்கு வினை முடிச்சை அவிழ்க்க வந்தாளா..?

பிள்ளைகள் கையால் உணவு வாங்கிச் சாப்பிட்டு விட்டுப் பார்வையாலேயே அந்த பிள்ளைகட்குத் தன் கடைக்கண் வீச்சைப் பாய்ச்சி அருள் பாலிக்க வந்தாளா..?

தஞ்சை மண்ணில் விளையாடப் போகிறேன் என்றாளே.. இன்று உங்கள் மன்றத்தில் ஒரு ஏழைக் கிழவியாய் வந்து விளையாடி விட்டுத்தான் போகிறேனே என்று சொல்லாமல் சொல்ல வந்தாளோ..?

(தொடர்ச்சி..12ஆம் பக்கம்)

ஆன்மிககுரு
அருள்திரு அடிகளார் அருளிய
# குரு உபதேசங்கள்



## எல்லா வீடுகட்கும் என்னால் வரமுடியாது

“எல்லா வீடுகட்கும் என்னால் வர முடியாது. உங்களால் 200, 300 வீடுகட்கும் செல்ல முடியும். என்னால் அப்படிப் போக முடியாது. அங்குள்ள துர்த்தேவதைகளை மீறிக் கொண்டு நான் உள்ளே நுழைய வேண்டியுள்ளது.

உங்களால் அவற்றுக்குத் தொல்லை இல்லை. உங்கட்குப் பிரச்சனை இல்லை. நான் போனால் அவற்றுக்குப் பிரச்சனை. அதனால் அவற்றை மீறிக்கொண்டு தான் உள்ளே செல்ல வேண்டியுள்ளது.

நான் திரும்பி வரும்போது என் முகத்தைப் பார்த்தால் உங்கட்குப் புரியும்.

அதிலும் பல பங்களாக்களில் இந்தத் துர்த்தேவதைகளின் ஆதிக்கம் மிகுதி!”

## தொண்டர் தலைவர் வேறுபாடு கூடாது

“நம் இயக்கத்தில் பெண்களிடம் ஆர்வமும் எழுச்சியும் அதிகம். அவர்கட்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க முடியும்.

இங்கே தலைவர்கள், தொண்டர்கள், இடையே வேறுபாடு கூடாது. மனிதனை மனிதன் மதிக்க வேண்டும்.

அம்மா என்னிடம் மட்டும் இல்லை! உங்கள் ஒவ்வொருவர் உள்ளேயும் அம்மா இருக்கிறாள்.

மற்றவர்களையும் நீங்கள் அம்மாவாகப் பாருங்கள். உங்களை மற்றவர்கள் அம்மாவாகப் பார்ப்பார்கள்!”

## ஏழைக் கிழவியாய்...

(11ஆம் பக்க தொடர்ச்சி)

ஏதோ அன்னதானம்! ஏழை மக்கள் தானே.. எப்படிப் போட்டாலும் வாங்கிக் கொண்டு போகிறவர்கள்தானே.. விழா என்றால் அன்னதானமும் ஒரு சடங்கு என்றெண்ணி பாவனைக்காக அந்த அன்னதானம் நடத்தப்படுகிறதா என்று பார்க்க வந்தாளா?

எதிலே சோடை போனாலும் இந்தப் பிள்ளைகள் அன்னதானத்திலும், வேள்விப் பூசையிலும் சோடை போய்விடக் கூடாது என்று உணர்த்த வந்தாளா?

சக்திகளே! அன்னதானம் என்பது ஏதோ ஏழை எளியவர்கட்கு வடித்துப் போடுவது என்றெண்ணி விடவேண்டாம்.

ஓர் ஏழைக் கிழவியாகவோ, ஒரு பிச்சைக்காரனாகவோ அல்லது ஒரு பிச்சைக்காரியாகவோ கூட அங்கே நம் அம்மா வருவாள். சோதனை நடத்துவாள்.

உங்கள் கண்களையும் அறிவையும் உணர்வையும் மாயைத் திரையால் மூடி வைத்து விட்டே வருவாள்.

ஏமாந்து போக வேண்டாம்.

ஓம் சக்தி!

# Brisbane Mandrams – Upcoming Events – October 2018






# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

| | | | | |
|---|---|---|---|---|
| 05.10.2018 | வெள்ளி | புரட்டாசி | 19 | ஏகாதசி விரதம் |
| 06.10.2018 | சனி | புரட்டாசி | 20 | 3ஆம் புரட்டாசி சனி |
| 08.10.2018 | திங்கள் | புரட்டாசி | 22 | **அமாவாசை விரதம்** |
| 09.10.2018 | செவ்வாய் | புரட்டாசி | 23 | **நவராத்திரி ஆரம்பம்** |
| 12.10.2018 | வெள்ளி | புரட்டாசி | 26 | சதுர்த்தி விரதம் |
| 13.10.2018 | சனி | புரட்டாசி | 27 | 4ஆம் புரட்டாசி சனி |
| 14.10.2018 | ஞாயிறு | புரட்டாசி | 28 | ஷஷ்டி விரதம் |
| 18.10.2018 | வியாழன் | ஐப்பசி | 01 | **சரஸ்வதி பூஜை - ஆயுத பூஜை** |
| 19.10.2018 | வெள்ளி | ஐப்பசி | 02 | **விஜயதசமி**<br>கேதாரகௌரி விரதாரம்பம் |
| 20.10.2018 | சனி | ஐப்பசி | 03 | ஏகாதசி விரதம் |
| 22.10.2018 | திங்கள் | ஐப்பசி | 05 | பிரதோஷ விரதம் |
| 24.10.2018 | புதன் | ஐப்பசி | 07 | **பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி |
| 26.10.2018 | வெள்ளி | ஐப்பசி | 09 | கார்த்திகை விரதம்<br>**திருவிளக்குப் பூஜை**<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி செண்டர் |
| 28.11.2018 | ஞாயிறு | ஐப்பசி | 11 | சங்கடஹர சதுர்த்தி |
| 03.11.2018 | சனி | ஐப்பசி | 17 | ஏகாதசி விரதம் |
| 06.11.2018 | செவ்வாய் | ஐப்பசி | 20 | தீபாவளி |
| 07.11.2018 | புதன் | ஐப்பசி | 21 | **அமாவாசை விரதம் - கேதாரகௌரி விரதம்** |
| 08.11.2018 | வியாழன் | ஐப்பசி | 22 | **ஸ்கந்தஷஷ்டி விரதாரம்பம்** |
| 11.11.2018 | ஞாயிறு | ஐப்பசி | 25 | சதுர்த்தி விரதம் |
| 13.11.2018 | செவ்வாய் | ஐப்பசி | 27 | **ஸ்கந்தஷஷ்டி விரதம்** |
| 20.11.2018 | செவ்வாய் | கார்த்திகை | 04 | பிரதோஷ விரதம் |
| 23.11.2018 | வெள்ளி | கார்த்திகை | 07 | **பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி |
| 26.11.2018 | திங்கள் | கார்த்திகை | 10 | சங்கடஹர சதுர்த்தி |
| 03.12.2018 | திங்கள் | கார்த்திகை | 17 | ஏகாதசி விரதம் |
| 04.12.2018 | செவ்வாய் | கார்த்திகை | 18 | பிரதோஷ விரதம் |
| 06.12.2018 | வியாழன் | கார்த்திகை | 20 | **அமாவாசை விரதம்** |
| 11.12.2018 | செவ்வாய் | கார்த்திகை | 25 | சதுர்த்தி விரதம் |
| 13.12.2018 | வியாழன் | கார்த்திகை | 27 | விநாயகஷஷ்டி விரதம் |
| 14.12.2018 | வெள்ளி | கார்த்திகை | 28 | திருவெம்பாவை பூஜாரம்பம் |
| 20.12.2018 | வியாழன் | மார்கழி | 05 | பிரதோஷ விரதம் - கார்த்திகை விரதம் |
| 22.12.2018 | சனி | மார்கழி | 07 | **பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி |
| 23.12.2018 | ஞாயிறு | மார்கழி | 08 | **ஆருத்திரா தரிசனம்** |
| 25.12.2018 | செவ்வாய் | மார்கழி | 10 | சங்கடஹர சதுர்த்தி |
| 28.12.2018 | வெள்ளி | மார்கழி | 13 | **திருவிளக்குப் பூஜை**<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி செண்டர் |